ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. பிரபவஹு பங்குனிமீ பகுதி ந.
Vol 5. *March & April 1928.* No. 3.

திருநாமம்.

குருகுலத்திலுதித்த பஞ்சபாண்டவர்களின் வம்சத்தில் தோன்றினவனாகிய சதாநீகன் என்ற மஹாராஜன் * 'புல்வாயும் புலிப்போத்தும் ஒருதுறையில் நீரருந்'தும்படி செங்கோன்மையோடு ராஜ்யபரிபாலனஞ் செய்துவருகிற காலத்தில் அவனுக்கு 'நம் நிழலிலொதுங்கி வாழ்கின்றவர்கட்கு ஸத்கெதியடைதற்குரிய மார்க்கத்தையும் தெரிவிக்கவேண்டும்' என்ற எண்ணமுண்டாயிற்று. இவ்வெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு இவன் ஸௌநக பகவான்பாற்சென்று அவரடி பணிந்துநின்று 'ஸ்வாமி! ஜ்ஞாநமற்றவராய் இருவினைப் பாசத்தளையிற் கட்டுண்டலைகிற ஸம்ஸாரிகட்கு உஜ்ஜீவனோபமாயிருப்பதொன்றருளிச்செய்க' என்று வேண்டி நின்றான். அப்பொழுது ஸௌநகபகவான் 'அரசனே! இப்பொழுது கொடியகலி ஸாம்ராஜ்யம் செய்கிற காலமாயிருக்கிறது. இக்காலத்தில் பாபமே மேலிட்டிருப்பதால் ஸத்விஷயத்தில் நிலையுற்றிருக்கும் புத்திபிறப்பது எவர்க்கு மரிதாயிருக்கும். ஆதலால் யோகாதி மார்க்கங்களைக் கைப்பற்றி ஒழுகுதற்கு விவேகசூந்யர்களாகிய ஸம்ஸாரிகள் அதிகாரிகளாகமாட்டார்கள். இனி, ஸர்வாதிகாரமாகிய பகவந்நாம ஸங்கீர்த்தநமே ஆத்மாக்களுக்கு உஜ்ஜீவனோபாயமாகவிருக்கும்' என்றருளிச்செய்தார்.

---

* புல்வாய்—மான்.

இங்ஙனம் ஸங்கீர்த்தநமாத்திரத்தாலே பலந்தரவல்ல பகவந்நாமம் ஒன்றிற்கே பலவியல்புகளுள்ளன பகவந்நாமம் ஒன்றிற்குப் பலவியல்புகள் பொருந்துவதெங்ஙனமெனின்? உலகத்தில் தேஹாத்மாபிகளாயிருக்கிற ஸம்ஸாரிகளுக்கு அந்நம் ஒன்றே "ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:" ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி:" என்றபடி பரிசுத்தமாயும், தேஹம் நிலைநிற்றற்குச் சாதனமாயும், போக்யமாயுமிருக்கும். இஃதன்றி இவ்வந்நத்தைத் தானஞ்செய்தால் இது பலத்தையுந்தரும். இதை அதிகமாக உட்கொண்டால் உயிரையுமொழிக்கும். ஆக அந்நமொன்றிற்கே பலவியல்புகளமைந்திருப்பனபோல, திருநாமம் ஒன்றிற்குப் பலவியல்புகளுண்டெனக் கொள்வது பொருந்துமென்க.

எம்பெருமானுடைய திருநாமம் ப்ரஸ்தாபிக்கப்படுகிற விடங்களில் திருநாமம், (1) "புண்யாநாமபி புண்யோஸௌ" "புண்யாநாமபி புண்யோஸௌ" என்றபடி உய்வதற்குச் சாதனமாயும், (2) "மங்களாநாஞ்ச மங்களம்" "மங்களாஞ்ச மங்களம்" என்றபடி ப்ராப்யமாயும், (3) "பவித்ராணாம்ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே" "பவித்ராணாம்ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே" என்றபடி பரிசுத்தமாயும், (4) "யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி" "யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி" என்றபடி ஸம்ஸாரபயத்தை யகற்றுவதாயுமிருக்குமென்று சொல்லப்பட்டுளது. இதனாலும் திருநாமத்திற்குப் பலவியல்புகளுண்டென்பதைத் தெளிவாக வறியலாம்.

உலகினர் தத்தம் புத்திக்கேற்றவாறு திருநாமம் 'இன்னவியல்புடையது' 'இன்னவியல்புடையது' என்று மனத்துட்கொண்டு

(1) இ-ள். புண்யங்கட்கெல்லாம் புண்ணியமாகவிருக்கிறான்; என்பதாம்.
(2) இ-ள். மங்கலங்கட்கெல்லாம் மங்களமாகவிருக்கிறான்; என்பதாம்.
(3) இ-ள். கோவிந்தன், பரிசுத்தங்கட்கெல்லாம் சிரேஷ்டமான பரிசுத்தனென்று சொல்லப்படுகிறான்; என்பதாம்.

(4) இ-ள். யாதொரு பகவந்நாம ஸங்கீர்த்தனத்தினலே மிக்க பயங்கரத்தினின்றும் விடுதலை யடைகிறான்; என்பதாம்.

போற்றிவருகின்றனர். இங்ஙனம் போற்றிவருகின்றவர்களை முப்புகுதியினராகப்பிரித்து அவர்கள் திருநாமத்தை இவ்வாறு கையாண்டார்கள் என்பதை ஈண்டு விரித்துரைக்கப்பெறும். முத்துப்படும் கடற்றுறையில் முழுகி முத்தெடுக்கும் பரதர் முத்தின் பெருமையறியாது முத்தைக்கொடுத்து நெல்முதலியவற்றைப் பெறுவார்கள். விலையறியும் செட்டிகள் கைப்புகுந்தால் அம்முத்து மிகுந்த விலையுடையதாய் மதிக்கப்படும். தனமுடைய செருக்காளர் கையிற் புகுமேல் அதைத் தாமே பூண்டு அநுபவிப்பார்கள். அதுபோல ஏதேனும் பிரயோஜனத்தைப் பெறுவதிலே நோக்கமுடையவர்களாகிய ஸம்ஸாரிகள் தாம் விரும்பிய பலத்தைப் பெருவதற்குப் பகவந்நாமத்தைச் சாதனமாகக் கொள்வார்கள். ஆத்மஜ்ஞாநம் கைபுகுந்துள்ள மஹருஷிகள் திருநாமத்தை ஸம்ஸாரமாகிய பிணியைப் போக்குவதற்கு மருந்தாகக் கொண்டார்கள். மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் திருநாமம் தமக்குப் பரமபோக்கியமாக விருக்கின்றதென்று திருவுள்ளம் பற்றினார்கள். இது விஷயத்தைக் குறித்துப் பெரியவாச்சான்பிள்ளை "யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி நஸம்ஶயம் நர:" 'யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி நஸம்சயம் நர:' என்று ருஷிகள், திருநாமம் பயநிவ்ருத்திக்கு ஹேதுவாகச் சொல்லுவர்கள்; ஆழ்வார்கள், 'பிழைப்பில் பெரும்பெயரே பேசி' என்று போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுவர்கள். இத்திருநாமந்தான் ப்ரயோஜநாந்தரபரர்க்கு ப்ரயோஜனத்தைக் கொடுக்கும். உபாயாந்தர நிஷ்டருக்குப் பாவநமாயிருக்கும். ப்ரபந்நருக்குத் தேஹயாத்ரா சேஷமாயிருக்கும்" என்று அருளிச்செய்தார்.

இன்னும் ஆழ்வார்கட்கு எம்பெருமானுடைய திருநாமம் தாரகமாயும் போக்யமாயும் பரிசுத்தமாயும் இருக்குமென்பதை அவர்களுடைய பொய்யில் பாடல்களால் ஆராய்ந்துரைக்கப்படும்.

"பச்சைமாமலைபோல்மேனிபவளவாய்கமலச்செங்கண்
அச்சுதாவமரரேறேஆயர்தம்கொழுந்தேயென்னும்
இச்சுவைதவிரயான்போய்இந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டேனரங்கமாநகருளானே"

என்று தொண்டரடிப்பொடியாழ்வார், இங்கேயிருந்து திருநாமத்தையநுபவிக்கும் இனிமைக்குப்பரமபத அநுபவமும் சமமாகாதென்னும்படி திருநாமம் தமக்குரஸித்தபடியை அருளிச்செய்தார். இந்தப்பாசுரம் பெரியபெருமாளைநோக்கி யருளிச்செய்ததாயிருக்கின்றதினால் இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை "கீழ் 'நின்னமங்சற்ற' என்று நின்றீர்; நம்பேர் சொன்னார்க்கு நாம் கொடுக்கக்கடவதொரு நாடுண்டு; 'அதை அவர்கள் கொள்ளோம் என்னவொண்ணாது; நம்மால் கொடோம் என்னவொண்ணாது; அதைக்கொள்ளீர்' என்று பெரியபெருமாள் அருளிச்செய்ய; திருநாமஞ்சொல்லும்போதை ரஸமொழிய அவ்வருகுபோய் அநுபவிக்கும்ரஸம் எனக்கு வேண்டா என்கிறார்." என்றருளிச்செய்தார். மேலும் இவ்வாழ்வாரே,

> காவலிற்புலனை வைத்துக்கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து
> நாவலிட்டுழிதருகின்றோம்நமன்றமர்தலைகள்மீதே
> மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வநின்னாமங்கற்ற
> ஆவலிப்புடைமைகண்டாயரங்கமாநகருளானே.

என்ற பாசுரத்தில் திருநாமத்தைப் பயின்ற ஆவலிப்பினால் (செருக்கினால்) இந்திரியங்களடங்காமை, யமபயங்கர முதலிய சிறுமைகள் நீங்கப்பெற்று ஜிதேந்திரியத்வம் (இந்திரியங்களை வெல்லுதல்) முதலிய தூய்மைகளுண்டாகி யமகிங்கரர்கள் தலையிலும் அடியிட்டுத் திரியும்படியான பெரும்பேறும் கிடைத்தது என்றாராதலால் திருநாமத்திற்குப் பாவநத்வம் (தூய்மை) உண்டென்பது பெறப்பட்டது. ஆண்டாள் எம்பெருமானுடைய திருமேனிக்குப்போலியான மேகங்களைப் பார்த்துத் தூதுவிடுகின்றவிடத்தில்

> ஒளிவண்ணம்வளைசிந்தையுறக்கத்தோடிவையெல்லாம்
> எளிமையாலிட்டென்னையீடழியப்போயினவால்
> குளிரருவிவேங்கடத்தென்கோவிந்தன்குணம்பாடி
> அளியத்தமேகங்காள்ஆவி காத்திருப்பேனே

என்று அருளிச்செய்தாள். இங்குக் கோவிந்தன் குணம்பாடி ஆவி காத்திருப்பேன் என்றதனால் ஆண்டாளுக்குத் திருநாமம் தாரகமாயிருந்ததென்பது பெறப்படும். இதுநிற்க; பிரிவாற்றாமை எய்திய சமயத்தில்

உயிர்க்கதுகாலனென் றும்மையானிரந்தேற்குநீர்
குயிற்பைதல்காள்கண்ணன்நாமமேகுளறிக்கொன்றீர்
தயிர்ப்பழஞ்சோற்றொடுபாலடிசிலுந்தந்துசொற்
பயிற்றியநல்வளமூட்டினீர்பண்புடையீரே.

என்று நம்மாழ்வார் சிறுகுயில்களைப்பார்த்து குயிற்பைதல்களே! இப்பொழுது கண்ணனுடைய திருநாமத்தைச் சொன்னால் முடிந்துவிடுவேனாதலால் அந்நாமத்தைச் சொல்லவேண்டாவென்று நான் உங்களை யாசித்து நின்றவிடத்திலும், அதைப் பொருட்படுத்தாமல் அந்த நாமத்தைச் சொல்லிக்கொன்றீர்களே. உங்களைப் பாலடிசில் முதலியவற்றையூட்டி வளர்த்ததின் ப்ரயோஜனம் மிகவும் அழகியதாகவிருக்கிறது; என்று அருளிச்செய்ததினால் திருநாமம் நஞ்சுபோல வெறுப்பைத் தருவதாயுமிருக்கும். அம்ருதமானது போக்யவஸ்துவாயிருந்தாலும் மிகுதியாக வுட்கொண்டால் அது எங்ஙனம் ஹிம்ஸையைத்தருமோ அதுபோல அத்யந்த பக்தியின் கார்யமானது இவ்வாறு செய்யுமென்றறியத்தக்கது.

ஆக, இத்துணையுங் கூறியவாற்றால் பகவந்நாமத்திற்குப் பலவியல்புகளுண்டென்பதும், அது எல்லாப்பயனையுந்தரவல்லதென்பதும், பிரயோஜநாந்தரபரர்கள் இதை (திருநாமத்தை)ச் சாதனமாகக் கொண்டார்களென்பதும், மஹருஷிகள் இது, ஸம்ஸாரமாகிய பிணிக்கு மருந்தாயிருக்குமென்று கருதினார்களென்பதும், ஆழ்வார்கட்குத் திருநாமம் போக்யமாயும் தாரகமாயுமிருந்ததோடு விச்லேஷதசையில் வெறுப்பைத் தருவதாயுமிருந்ததென்பதும், அதுவும் அத்யந்த பக்தியின் கார்யமென்பதும் பெறப்பட்டன.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(37-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸர்வேசுவரனையும், ஆசார்யனையும், பாகவதரையும் தினந்தோறும் தெண்டன் ஸமர்ப்பிக்கிறதும் பரமைகாந்திகளுக்கு ஆவசியகம். அது ஸகிருத்தாகவும், அஸகிருத்தாகவும் அநுஷ்டிக்கப்படுகிறது. இவ்விஷயத்தில் ஸகிருத்வந்தனத்துக்கு ப்ரமாணமில்லையென்று சிலர் அதை உபேக்ஷிப்பதால் அது ப்ரமாணஸித்தமென்பது இங்கு விவரிக்கப்படுகிறது.

வந்தனம் காயிகப்ரபத்திரூபமான உபாயமாயும், பலரூபமாயுமிருக்கும். "நித்யாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா:" "நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா:" என்பது பலரூபமாயிருப்பதற்கு ப்ரமாணமாம்.

உபாயரூபமான வந்தனம் "ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த:" "ஸக்ருதேவஹி சாஸ்த்ரார்த்த:" என்கிற வசனப்படி ஸகிருத்தாகவே அநுஷ்டிக்க வேணும்.

பலரூபமான வந்தனம் அநேகாவ்ருத்தி விசிஷ்டமாகவுமிருக்கலாம். ஆனால் பன்னிரண்டு தரம் என்றும், இரண்டு தரம் என்றும், நாலு தரம் என்றும், ஸங்கியாவிதி ஏற்படமாட்டாது.

"ச்வபிதி க்ருதக்ருத்யஸ்ஸ நம:" "அபரிமிதகிருத்வஸ்தேநம:" என்கிற சுருதியின்படியும், "கைகளாலாரத்தொழுது தொழுது" என்றும், "நம: ஸஹஸ்ரக்ருத்வ: ப்ருஷ்டதஸ்தே" "நம: புரஸ்தாத் அதப்ருஷ்டதஸ்தே" என்றும் சொல்லுகிற ப்ரமாணப்படியும், ராக ப்ரேரிதனாய்க்கொண்டு அஸங்கியேயமான வந்தனத்தையும் அநுஷ்டிக்கலாம். ஆனாலும் ஸ்துதியில், "ஸக்ருத்தே நம:" ஸக்ருத்தே நம:'. என்று ஸகிருத்வந்தனம் சொல்லப்பட்டிருக்கிறது.

தேசிகன் ஸ்தோத்ரபாஷ்யத்தில், “நமொ நமொ வாஙமநஸாய ஹூமயெ” “நமோ நமோ வாங்மநஸாய பூமயே” என்கிற சுலோக வ்யாக்கியாநத்தில் அந்த நமோ நம: என்கிற த்விருக்தி “பௌந:புந்யம் அலங்க்ருதி:” என்கிற வசனப்படி ஆதரத்தா லேற்படுகிறதென்றும், “ஏகொவிஸ க்ருஷ்ண ஸக்ருத ப்ரணாமঃ” “ஏகோபிஸக்ருஷ்ணே ஸக்ருத ப்ரணாம:” என்கிற வசனப்படி ஸக்ருதாவ்ருத்தி ப்ரணாமமே உசிதமென்றும் அருளிச் செய்திருக்கிறார்.

அதுவுமன்றி. யதிராஜஸப்ததியில் “ப்ரணாமம் லக்ஷ்மணமுநிঃ ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்” “ப்ரணாமம் லக்ஷ்மணமுநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்” என்பதில் ‘ப்ரணாமம்’ என்று ஏகவசனமாக அருளிச்செய்திருக்கிறபடியாலும் ஏகவாரப்ரணாம மேற்படுகிறது; ஆனால் அது ஜாத்யேகவசனமென்று சொல்லும் பக்ஷத்தில், “ஆக்ஷெபதঃ ப்ராப்தா தாபிதாநிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்” “ஆக்ஷேபத: ப்ராப்தா தாபிதாநிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்” என்கிற ந்யாயத்தாலே ‘ப்ரணாமாந்’ என்று பஹுவசனத்தாலேயே அருளிச் செய்திருக்கலாம்; அப்படிக்கில்லாமையாலும், ஸ்தோத்ர பாஷ்யத்தில் ஸக்ருதாவ்ருத்தி ப்ரணாமமே உசிதமென்று அருளிச் செய்திருப்பதாலும் ஏகவாரப்ரணாமம் தேசிகனுக்கு அபிமதமென்று தெரிகிறது.

ஸக்ருத்வந்தனம் நிஷித்தம்; அஸக்ருதாவ்ருத்தி வந்தனமே விஹிதமென்று சொல்லும்பக்ஷத்தில் காயிகப்ரபத்திரூபமான வந்தநத்திலேயும் அஸக்ருதாவ்ருத்தி ஏற்படும். அப்போது “ஸக்ருதெவஹி ஶாஸ்த்ராத்தঃ” “ஸக்ருதேவஹி சாஸ்த்ரார்த்த:” என்கிற ப்ரமாண விரோத மேற்படும். ப்ரதிதிநம் அபிகெமந காலத்தில், “புத்ரঃ ப்ரெஷ்யஸ்ததா ஶிஷ்யঃ ஆத்மாநஞ்ச நிவெதயெத்” “புத்ர: ப்ரேஷ்யஸ்ததா சிஷ்ப: ஆத்மாநஞ்ச நிவேதயேத்” என்கிற சாண்டில்ய வசனப்படி, ப்ரபத்திவிஹிதையால் அப்பொழுது அஸக்ருதாவ்ருத்தி கூடாது.

அப்படியே ஆசார்ய விஷயத்திலும், பாகவத விஷயத்திலும் ப்ரதிதிந மேற்படுகிற அபசாரக்ஷாபணத்திற்காக ஏற்படுகிற வந்தநத்திலும் அஸக்ருதாவ்ருத்தி கூடாது. வைகாநஸத்தில் “ப்ரணா

ഭൗ ஒணுவ நஃஸாரம் வஞ்ச வாகூംவா கூுபுராக” “ப்ரணுமம் தண்டவந் நமஸ்காரம் பஞ்ச ஏகம்வா குர்யாத்” என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஸாத்வததந்த்ரத்தில் “ஹுஷக்ஷிண ஹுணாமோநு யுஹாந் கூுபுராஜிவக்ஷணஃ” “ப்ரதக்ஷிண ப்ரணுமாந் யுக்மாந் குர்யாத்விசக்ஷண:” “வாக த்ரி வஞ்ச ஸஹாதிமண நா விஷயஞ்சயக” “ஏக த்ரி பஞ்ச ஸப்தாதிகணநா விஷபஞ்சயத்” என்றிருக்கிறது. சுருதியிலும் ‘ஸகூரு தெதநஃ’ “ஸக்ருத்தேநம:” என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதில் யுக்மத்வா யுக்மத்வங்களுக்கு ஏகத்ரஸமாவேசம் கூடாமையாலே ஸமுச்சயம் கூடாது; விகல்பமே சொல்ல வேணும்.

“தீநு வநணீதெ ந வதுாரோவநணீதெ” “த்ரீந் வ்ருணீதே ந சதுரோவ்ருணீதே” என்கிறவிடத்தில் மூன்று பேரை வரிக்கவேணும்; நாலு பேரை வரிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறபடியால் மூன்று பேரை வரிக்கவேணும் என்றதனலேயே நாலு பேரை வரிக்கலாகாது என்றேற்படுகிறபடியால் ‘நசதுரம் வ்ருணீதே’ என்பது விதியன்று; அநுவாதம் என்று சொல்லுமாப் போலே ஏகப்ரணுமம் விதிக்கிறவிடத்திலேயும் அதிக ஸங்க்யா வ்யவச்சேதம் ஏற்படும். அப்படியே ‘த்ரீந்’ என்கிறவிடத்திலும் அதிக ஸங்க்யா வ்யவச்சேதமேற்படும். ஆகையால் ஏகவார ப்ரணுமத்திற்கும் அநேகவார ப்ரணுமத்திற்கும் விகல்பமே சொல்ல வேண்டும். அதில் ப்ரபத்திநிஷ்டர்களுக்கு அடிக்கடி பகவத் பாகவத விஷயங்களிலேற்படுகிற அபசாரக்ஷாபணத்திற்காக காயிக ப்ரபத்திரூபமான வந்தனமேற்படுகிறபடியால் அந்த வந்தனம் ஸக்ருதாவ்ருத்தமாகவே இருக்கவேண்டும். பலரூபமான வந்தனம் அஸ்கிருதாவ்ருத்தமாயிருக்கலாம். ஆனல் ஸங்க்யாநியமமில்லை. வந்தன ஸாமாந்யமே ஸகிருத்தாயிருக்கக்கூடாது என்று சொல்லுவது ப்ரமாண விருத்தம்.

பாஞ்சராத்ரரக்ஷை முதலிய இடங்களில் சதுஸ்ஸங்கியை முதலான ஸங்கியாவிதாநம் ப்ரபந்நேதரவிஷயம். “விஹுாணாം ஜூா ந

ஜ்ஞாநதோஜ்யைஷ்ட்யம்'' "விப்ராணும் ஜ்ஞாநதோஜ்யேஷ்ட்யம்'' என்கிறமநுவசனத்தின்படிக்கும், "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா'' "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா'' என்கிற வசனப்படிக்கும், ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞாநத்தாலே உத்கர்ஷமும், வைஷ்ணவர்களுக்கு பரஸ்பரம் வந்தநீயத்வமும், சொல்லப்பட்டிருப்பதால் வய: க்ரம நியமமில்லை.

சிஷ்யாசார்யர்களில் ஆசார்யன் சிஷ்யவிஷயத்தில் வந்தனம் செய்யக்கூடாதென்றும், பிதாவானவன் புத்ரனை வந்தனம் செய்யக்கூடாதென்றும், அப்படியே வயோதிகர்கள் ந்யூனவயஸ்கர்களை வந்தனம் செய்யக்கூடாதென்றும் இருந்தபோதிலும், விசேஷித்து ஜ்ஞாநாதிகர்களாயிருந்தால் அவர்களுடைய ஜ்ஞாநாதிக்கியத்தைக் கண்டு பரவசர்களாய் வந்தனம் செய்வது பல விடங்களிலிருப்பதால் அதுவும் உபபன்னம். இவைகளுக்கு ப்ரமாணமும் அநுஷ்டானமும் நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

பாரதீய பூர்வசிகாஸ்ரீவைஷ்ணவ மஹாஸபையின்

முதலாவது வருஷோத்ஸவ

அக்ராஸனப் பிரசங்கம்.

அக்ராஸனர்:

ஸ்ரீமாந், எம். ஜி. முகுந்தராஜையங்கார்ஸ்வாமி.

ஸ்வாமிகாள்!

நமது சமயசமூக சித்தாந்தத்திலாவது, க்ரந்தங்களிலாவது, ஆசாரணைகளிலாவது, நோக்கங்களிலாவது, எள்ளளவும் பயிர்ச்சியுடையனல்லேன். வயதாலும், வித்யையாலும், ஐச்வர்யத்தாலும், ஆசாரயோக்கியதையாலும், செல்வாக்காலும், சொல்வன்மையாலும், இம்மஹாசபைக்கு நாயகராய் அலங்கரிக்க கௌரவம் வாய்ந்துள்ள பல பெரியோர் நம்சமூகத்தில் நிறைந்திருக்க எவ்விதத்தகுதியுமற்ற என்னை ஸ்ரீமந்நாராயணன் தேவிமார்களுடன்

நித்யவாசம்செய்யும் பூலோக வைகுண்டமெனப்படும் இந்தத்திவ்ய தேசத்தில் நிகழும் நம் சபையின் முதலாவது உற்சவத்துக்கு அக்ராஸனனாக நியமித்தது எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்ததெனினும் அந்நியமனத்தை ஆக்ஞையாகக்கொண்டாடி இங்கே யெழுந்தருளியிருக்கும் பெரியோர்களின் ஆசிர்வாதத்தினால் இம்மஹா சபையை செவ்வனே நடத்தத்தக்க யோக்யதையும் சக்தியும் எனக்கு ஏற்படுமென்ற தைர்யத்தால் மேற்கொண்டேன். கிடைக்கவொண்ணா இச்கௌரவத்தை எனக்களித்த இந்த சபையோர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை வாக்கினால் சொல்வதினும் நான் செய்யக்கூடிய கைமாறு ஒன்றுமில்லை.

ஜாதிக்கூட்டங்களும், சமயக்கூட்டங்களும், வகுப்புக் கூட்டங்களும், பொதுஜனசமூக ஒற்றுமைக்கு இடையூறுகளென்பது சிலர்கருத்து. ஆனால் தற்கால நிலைமையில் அது நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய கோட்பாடல்ல. நவீனக்கல்வியாலும், உத்தியோகப்போட்டியாலும், காலகதியாலும், வகுப்புவேற்றுமை நாடெங்கும் பரவியிருக்கிறது. ஜாதிகளைப்பற்றியும், மதங்களைப் பற்றியும், வகுப்புக்களைப்பற்றியும், தங்கள் தங்கள் முன்னேற்ற நோக்கங்களுடன் பல சபைகளும், சங்கங்களும் கிளம்பியிருக்கின்றன. எவ்வகுப்பினர் சங்கங்கள் ஸ்தாபித்தும், ஒத்துழைத்தும், சீர்திருத்தம்செய்தும், தங்கள் நோக்கங்களையும், அபிப்பிராயங்களையும் உலகிற்கும், அரசாங்கத்தாருக்கும் தெரிவித்தும் வருகின்றனரோ, அவ்வகுப்பினரே முன்னேற்றமடைய முடியும். அல்லாதோர் சீர்குலைந்து நிலைகெட்டு மற்றவர்கட் கடிமைப்படுவர் என்பதில் ஐயமில்லை. ஆகலின் நம் வகுப்பினர்கள் சங்கம் ஸ்தாபித்து அதன் மூலம் நமது குற்றங்களைக்களைந்து மேம்பட உழைத்து குறைகளை வெளியிட்டு பொதுவிஷயங்களில் நம் கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று அறிவீர்கள்.

சம்ஸாரசாகரத்தில் மூழ்கித்தத்தளிக்கும் சேதனர்களாகிய மானிடர்கள் தன்னை அனுபவித்து அவ்வனுபவத்தாலுண்டான நிரதிசய ஆநந்தரூபமத் கைங்கர்யமாகிற மஹாசம்பத்தைப்பெற்று வாழவேணுமென்று ஸ்ரீய:பதியான சர்வேசுவரன் நியமனத்தின்

பேரில் அவதரித்த வேதம்தமிழ்செய்த ஆழ்வார்களில் எத்துணைப் பெயர் நம்மரபினர்கள்? சநாதனமதம் மறைந்து நாஸ்திகமும், மிலேச்சமும் நிமிர்ந்து உலவிவந்த காலங்களிலெல்லாம் வைதிக மதத்தையும், தத்துவங்களையும் பேணிப்பாராட்டி பாதுகாத்து யதிராஜருக்குதவி அவர்மூலம் உலகுய்யச்செய்த ஆசார்யர்களில் எத்துணைப்பெயர் நம்மவர்கள்? ஸ்ரீராமாநுஜருக்குப் பிற்காலம் க்ரந்தங்கள் மூலமும் வியாக்யானமாகவும், இன்கவிகளாகவும், அவரது கொள்கையைப்பாமரரும் அறியுமாறு பிரபலம்செய்த ஆசார்யர்கள் எத்துணைப்பெயர் நம் குலத்தோர்? ஆதலின் ஸ்ரீவிசிஷ்டாத்வைத மார்க்கத்துக்கும், நம்மவர்களுக்கும் உள்ளசம்மந்தம் சாமான்யமானதன்று. ஆதலின் இம்மார்க்க நூல்களையும், பிரபந்தங்களையும் இருமொழியிலும் கற்றுணர்ந்து அதன்படி ஒழுகியும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம் நாடெங்கும்பரவ அறிஞர்களைக்கொண்டு உபந்யசிக்கச்செய்து தாழ்ந்தோரும் உய்யுமாறு நாம் செய்யவேண்டும்.

பகவத்கைங்கர்யமே நம்மவர்களுக்குத் தொன்றுதொட்டு ஏற்பட்ட தர்மம். ஆதிகாலமுதல் பல திவ்யக்ஷேத்திரங்களிலும், ஆலயங்களிலும் மிராசுபாத்தியமாய் நம்மவர்களுக்குப் பல கைங்கர்யங்களும், மரியாதைகளும், பாத்தியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. லௌகிகமேம்பாட்டில் நம்மவர்கள் குறைவுற்றிருப்பதைக்கொண்டு உத்தியோகத்திலும், லௌகிகஸ்திதியிலும், தம்மவர்கள் பிரபலஸ்தர்களாயிருக்கும் தைர்யத்தைக்கொண்டு நம்மவர்கள் பாத்யங்களுக்குச் சில வகுப்பினர்கள் இன்னல்செய்துவருகிறார்கள். அவர்களின் பலாத்காரத்தால் நம்மவரில் பலர்கள் தங்கள் பாத்தியங்களைப் பறிகொடுத்திருக்கிறார்கள். பிறப்புரிமையான அவ்விதபாத்தியங்களுக்கு யாரும் தீங்குசெய்யாமலும், இழந்துபோன பாத்தியங்களைத் திரும்பிப்பெறவும் நாம் ஒற்றுமையுடன் முயற்சிக்கவேண்டும்.

பகவத்கைங்கர்யம் செய்பவர்கள் சிரத்தையைக்கைவிட்டு ஆசாரத்தையிழந்து தீயபழக்கங்களைக் கைக்கொண்டு பகவானுக்கு அபசாரம்செய்து வருவதை நாம்கண்டு விசனிக்கிறோம். அதனால் ஜனங்களுக்கு ஆலயங்களில் அருவருப்பும், பக்திக்குறைவும் ஏற்பட ஹேதுவாயிருப்பதுடன் நம் சமூகத்துக்கே அபக்யாதி ஏற்படக்

கூடியதாயிருக்கிறது. கைங்கர்யபரர்களை ஆசாரவழியில் திருத்தி சிரத்தையுடனும், பக்தியுடனும் கைங்கர்யம் செய்யுமாறு நாம் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய வாலிபர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமை யொன்றுண்டு. நவீனக்கல்வி பயின்றாலன்றி முன்னேற்றமடைவது தற்காலத்தில் துர்லபம் என்பது என் அபிப்பிராயம். ஆகவின் நம்மவர்கள் கல்விப்பயிர்ச்சிக்குச் சகல சாதனங்களையும் செயலுடையோர் தடையின்றிச் செய்ய முன்வரல்வேண்டும்.

ஆனால் நவீனமுறைகளைப் போதிக்கும் கலாசாலைகளில் கற்பிக்கும் கல்வியோ நாஸ்திக புத்தியை யுண்டாக்குகிறது. அவ்விதம் நாஸ்திகத்தில் அழுந்தாமலும், நம் மதத்தில் பற்று ஏற்படும்படி செய்யவும் நாம் முன்வரவேண்டும் கல்விக்கழகங்கள் உள்ள பட்டணங்களில் நம் சிறுவர்கள் வசிக்கவும், புசிக்கவும் ஜாகாக்கள் ஏற்படுத்தி அறிஞர்களைக்கொண்டு நம் மதத்தையும், ஆசாரணையையும் போதித்து மதப்பற்றுண்டாக்கவேண்டும்.

ராஜீய விஷயமாயும்; ஆசாரச்சீர் திருத்தவிஷயமாயும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு மதக்கொள்கைக்கும், சாஸ்திரங்களுக்கும் விருத்தமான பல விஷயங்கள் சட்டசபைகளில் உலவுகின்றன. சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளில் பெரும்பான்மை எக்காலத்துக்கும் விதிக்கப்பட்டவைகளென்பதும், மற்றவைகள் காலத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் தக்கபடி அந்தந்த சமூகத்தார்கள் பெரியோர்களுடையவும், ஆசார்யர்களுடையவும், கருத்தைக்கொண்டு சீர்திருத்தம் செய்துகொள்ளத் தக்கவையென்பதும் எனது அபிப்பிராயம். ஆனால் அந்த சீர்திருத்தங்கள் அந்தந்த சமூகவாயிலாக ஏற்படவேண்டும். பல மதத்தினர்களும், நாஸ்திகர்களும் பல ஜாதியார்களும் அடங்கிய சட்டசபைகள் சநாதனமாக அனுசரித்துவரும் மத ஆசரணைகளைப்பற்றித் தீர்மானிப்பது கண்டிக்கத்தக்கது. ஆசாரச்சீர்திருத்தங்கள் சம்மந்தமாக ஏற்படும் கிளர்ச்சிகளில் எவையெவை தக்கனவென்றும், எவையெவை தகாதனவென்றும் நம் சமூகத்தினர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடவேண்டியது முக்கியமான கடமை. சாஸ்திரங்களில்

சொல்லியவற்றை மாற்றுதல் கூடாதென்று ஒரு கக்ஷியும், சாஸ்திரமே பயனற்றதென்று ஒரு கக்ஷியும், சாஸ்திரம் என்னசொல்லுகிறதென்பதைப்பற்றிப் பல கக்ஷிகளும் இருந்துவருகின்றன.

ராஜீயவிஷயமாக சட்டசபை அங்கத்தினர் தேசத்தார்களின் பிரதிநிதிகளென்றும், தேசத்தின் அபிப்பிராயத்தைப் பிரதிபிம்பிக்கிறார்களென்றும் ஒப்புக்கொண்டாலும் மதாசாரவிஷயமாக அவ்விதம் சொல்லக்கூடவில்லை. ஆசாரவிஷயமாகக்கொண்டு வரப்படும் திருத்தங்கள் மதக்கொள்கைக்கு முரண்பட்டவைகளா? முரணுயில்லாவிட்டால் சமுகத்தின் நன்மைக்கு அவசியமானவைகளா? என்பதைப்பற்றி நமது சபையும், நமது சபைபோன்ற இதர சமூகத்தினர்களின் சபைகளும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு வற்புறுத்தாவிட்டால் நாஸ்திகர்களும், பிறமதஸ்தர்களும், சாஸ்திரப் பயிற்சியின்றி மேல்நாட்டுப் படிப்பை அரைகுறையாகப் பயின்றவரும் நிறைந்துள்ள சட்டசபைகள் மூலம் நமது மதத்துக்கே அழிவு ஏற்பட ஹேதுவாகும்.

இப்போக்கொத்த பல காரியங்களைச் செய்யவேண்டியது அவசியமென என் சிறு புத்திக்குத் தோற்றியது. அவைகள் ஒவ்வொன்றையும் இங்கு வந்திருக்கும் ஸ்வாமிகள் தீர்க்காலோசனை செய்வீர்களென்று தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

நமது பூர்வாசார்யர்களுடையவும், முன்னோர்களுடையவும், ஆசரணைகளையும், நடையுடை பாவனைகளையும் கைவிடாமல் ச்ரத்தையுடன் நாம் எப்பொழுதும் அநுஷ்டித்துவரவும் நமதுசபையும் சமூகமும் சம்ப்ரதாயமும் தழைத்தோங்கவும் ஸ்ரீய:பதியான ஸ்ரீரங்கநாதன் கிருபை சுரந்தருள்புரிவாராக.

சுபம். சுபம்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(11-ம் பக்கத்தொடர்ச்சி.)

(௫௩) யக்ஷ:- 𑌧𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑌿𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌲𑌾𑌭𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌸𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑌿𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

தந்யாநாமுத்தமம் கிம்ஸ்வித்தநாநாம் ஸ்யாத்கிமுத்தமம்
லாபாநாமுத்தமம் கிம்ஸ்வித்ஸுகாநாம் ஸ்யாத்கிமுத்தமம்.

(இ-ள்) தனத்திற்கு ஹிதமானவைகளுட்சிறந்தது எது? செல்வங்களுட்சிறந்தது எது? லாபங்களுட்சிறந்தது எது? இன்பங்களுட் சிறந்தது எது? எ-ம்.

தர்ம:- 𑌧𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌧𑌨𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ।
𑌲𑌾𑌭𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌆𑌰𑍋𑌗𑍍𑌯𑌂 𑌸𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾 ॥

தந்யாநாமுத்தமம் தாக்ஷ்யம் தநாநாமுத்தமம ச்ருதம்
லாபாநாம் ச்ரேய ஆரோக்யம் ஸுகாநாம் துஷ்டிருத்தமா.

(இ-ள்) 54 தனத்திற்கு ஹிதமானவைகளுட் சிறந்தது •சதுரதையாம். (55) செல்வங்களுட் சிறந்தது ச்ருதமாம். (56) லாபங்

---

(௫௩) இனி, ஆத்மஜ்ஞாநத்திற்குரிய சில த்ருஷ்டஸாதனங்கள் கூறப்படுகின்றன.

(54) இங்குத் தனம் என்றது கல்விப்பொருளை. சதுரதை என்றது எடுத்துக்கொண்ட கருமத்தை முட்டின்றி முடிக்கும் சதுரப்பாடுடைய முயற்சியைக்குறித்து நின்றது. இம்முயற்சியின்றி எப்பொருளும் கைகூடாதாதலால் 'தனத்திற்கு ஹிதமானவைகளுட் சிறந்தது சதுரதையாம்' என்று சொல்லப்பட்டது.

இங்கு ஜ்ஞாந ஸாதனமாயிருக்கு முயற்சியைக் குறிப்பிடுகிறதினுல் முற்கூறிய முயற்சியின் இது வேறென்றறியத்தக்கது.

(55) ச்ருதம் என்றது செவிச்செல்வமாகிய கேள்வியை. செல்வம் பொருட்செல்வமென்றும், கல்விச்செல்வமென்றும் இருவகையாயிருக்கும். அவற்றுள் பொருட்செல்வம் தன்னின் வேருய்நின்று அழியுமியல்பினையுடையதாகும். கல்வி பலகாலமும் பலரிடத்துக் கேட்டலாலுண்டாகின்ற நல்லறிவாதலால் அது தன்னின் வேறுபடாமல் தனக்குற்ற துணையாயிருக்குமாதலால் 'செல்வங்களுட்சிறந்தது ச்ருதமாம்' என்று சொல்லப்பட்டது. "செல்வத்துட்செல்வம் செவிச்செல்வமச் செல்வம், செல்வத்துளெல்லாம் தலை" என்ற திருக்குறளையும் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

(56) தர்ம ஸாதனமாகிய சரீரத்திற்கு ஆரோக்யமில்லாதவிடத்துத் தர்மம் இனிது நடைபெருதாதலால் "லாபங்களுட்சிறந்தது ஆரோக்கியமாம்"

களுட் சிறந்தது ஆரோக்யமாம். (57) இன்பங்களுட் சிறந்தது ஸந்துஷ்டியாம்; எ-ம்.

(௫௬) யக்ஷ:- 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌰𑍋𑌲𑍋𑌕𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌦𑌾𑌫𑌲𑌂 ।
𑌕𑌿𑌂𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌨 𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌕𑍈𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌧𑌿𑌰𑍍𑌨 𑌜𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 ॥

கச்சதர்ம: பரோலோகே கச்சதர்ம: ஸதாபலம்
கிங்நியம்ய நசோசந்தி கைச்ச ஸந்திர் நஜீர்யதே.

(இ-ள்) தர்மத்துட்சிறந்தது எது? எந்தத் தர்மம் எப்பொழுதும் பயனளிப்பதாயிருக்கும்? எதை அடக்கித்துக்கிக்கிறதில்லை? எவருடைய சேர்க்கை நசிப்பதில்லை? எ-ம்.

தர்ம:- 𑌆𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌂 𑌪𑌰𑍋𑌧𑌰𑍍𑌮𑌃 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌦𑌾𑌫𑌲𑌃 ।
𑌮𑌨𑍋𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌨 𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌨 𑌜𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 ॥

ஆந்ருசம்ஸ்யம் பரோதர்ம: த்ரயீதர்ம: ஸதாபலன்
மனோநியம்ய நசோசந்தி ஸந்தி: ஸத்பிர் நஜீர்யதே.

என்று சொல்லப்பட்டது. எவ்வளவு சிறந்ததனவானுக இருந்தபோதிலும் அவனுக்குத் தேகாரோக்யமில்லாதபோது இன்பமில்லையாதலால் ஆரோக்யமே சிறந்ததென்பார் 'லாபங்களுட்சிறந்தது ஆரோக்யமாம்' என்ருர் என்று பொருளுரைக்கினும் பொருந்தும்.

(57) ஸந்துஷ்டியாவது மகிழ்ச்சியாம். இது, ஆசையற்ற நிலைக்களமெதுவோ அவ்விடத்திலே நிகழ்வதாயும், இணையற்ற இன்பத்தைப் பயப்பதாயுமிருப்பதால் 'இன்பங்களுட்சிறந்தது ஸந்துஷ்டியாம், என்றுரைக்கப்பட்டது. "𑌨𑌿𑌰𑌾𑌶𑌾𑌵𑌰𑌂 𑌸𑍌𑌖𑍍𑌯𑌂" (அவாவின்மை சிறந்த சுகமாம்.) என்பதும், "இன்பமிடையறு தீண்டுமவாவென்னும், துன்பத்துட்டுன்பங் கெடின்" என்பதும் ஈண்டறியத்தக்கன.

இதனுல் இடைவிடாமுயற்சியும், கல்விகேள்விகளும், ஆரோக்யமும், ஸந்துஷ்டியும் ஆத்மஜ்ஞானத்திற்குரிய த்ருஷ்டஸாதனங்களாமென்பது பெறப்படும்.

(௫௬) இனித் துறவறத்திற்கே தலைசிறந்தனவாகிய ஆந்ருசம்ஸ்யம் முதலிய தர்மங்கள் ஸுலபமாக மோக்ஷத்தைப் பயப்பனவாயிருப்பதால் இவைகளையும் முமுக்ஷுவானவன் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பதுரைக்கப்படுகிறது.

(இ-ள்) 58 தர்மத்துட்சிறந்தது ஆந்ருசம்ஸ்யமாம். (59) எப்பொழுதும் பயனளிப்பது த்ரயீதர்மமாம். (60) மனத்தை அடக்கித்துக்கிப்பதில்லை. (61) ஸத்துக்களுடைய சேர்க்கை நசிப்பதில்லை; எ-ம்.

தொடரும்.

---

(58) 𑌨𑍃𑌶𑌂𑌸𑍋 𑌨𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍃𑌶𑌂𑌸𑌃 𑌤𑌸𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 𑌆𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌂 ந்ருசம்ஸோ நபதீத்யந்ருசம்ஸ: தஸ்யபாவ: ஆந்ருசம்ஸ்யம். என்பதாம். அஃதாவது:— ந்ருசம்ஸனுவான் க்ரூரச்செயலை மேற்கொண்டவன். அச்செயலை ஒழித்தவன் அந்ருசம்ஸன். அவனது தன்மை ஆந்ருசம்ஸ்யமாம். அஃதியாதெனின்; அடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றுதல், கொல்லாமை முதலிய தர்மங்களை மேற்கொண்டொழுகுதலாலுண்டாகும் மன்னுயிருறும் துன்பத்தை நீக்குதல் முதலினவாம். பார்த்த தர்மீம் பலவற்றுள்ளும் பிறவுயிர் துயருறுவதைக்கண்டு ஐயோ! என்றிரங்கி ஆதரிப்பது மிகவும் சிறந்ததாகையால் ‘தர்மத்துட்சிறந்தது ஆந்ருசம்ஸ்யம்’ என்றுரைக்கப்பட்டது.

(59) இங்கு த்ரயீதர்மம் என்றது மோக்ஷமந்த்ரமாகிய ப்ரணவமந்த்ரோபாஸனையை. இது, தேசிகன்பாற் சென்று உபதேசமுறையால் கேட்கத்தக்கது. இதனுல் ஸித்திப்பது நித்யஸுகமாகிய மோக்ஷமாதலால் ‘எப்பொழுதும் பயனளிபப்து (அழியாத பயனைத்தருவது) த்ரயீதர்மமாம்’ என்று சொல்லப்பட்டது.

(60) மனம் தன்வயினடங்காமல் பற்பல விஷயங்களைப்பற்றிச் செல்லுமேல் அது, துன்பத்தை யுண்டுபண்ணும். மனம் பற்பல விஷயங்களிற் செல்லாது அடங்கியபோதுதான் இன்பமுண்டாமாதலால் ‘மனத்தையடக்கித் துக்கிப்பதில்லை’ என்று சொல்லப்பட்டது.

முன்னர் உரைக்கப்பட்ட மனவடக்கம் ச்ரவணுதி ஸாதனங்களில் அசக்தனுன ஒருவனுக்கு ஆத்மஜ்ஞாநத்தைப் பயப்பதாயிருக்கு மென்றுரைக்கப்பட்டது. இவ்விடத்திற் சொல்லப்பட்ட மனவடக்கம் சோகத்தினீங்கி நித்யஸுகத்தைப் பெறுவதற்குச் சாதனமாயிருக்கு மென்றதனுன் அதனின் இது வேறென்றறியத்தக்கது.